# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண். 34/ந/2026, நாள் 08.07.2026**

R. செல்லப்பாண்டியன்,
சொக்கி குளம், மதுரை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கோவில்பட்டி நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம். – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு, சொக்கிகுளம், அண்ணா நகர், கதவு எண். 78 என்கிற முகவரியில் வசிக்கும் திரு R. செல்லப்பாண்டியன் என்பவரது 28.01.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2026 அன்று பெறப்பட்டு, 34/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு, சொக்கிகுளம், அண்ணா நகர், கதவு எண். 78 என்கிற முகவரியில் வசிக்கும் திரு R. செல்லப்பாண்டியன் என்பவரின் 28.01.2026 நாளிட்ட புகார் மனுவில் கோவில்பட்டி நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 24.10.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நான் கோவில்பட்டி நகராட்சியில் 14.09.1990 முதல் 28.02.2025 வரை ஓட்டுநராகப் பணிபுரிந்து வயது முதிர்வில் ஓய்வு பெற்றேன். எனது சேமநல நிதிக் கணக்கில் இருப்பில் உள்ள தொகை ரூ.14,14,611/– மற்றும் ஈட்டிய விடுப்பு சொந்த அலுவல் நிமித்தமாக உள்ள ஈட்டா விடுப்பு ஒப்படை ஊதியம் பல முறை நேரிலும் மற்றும் விண்ணப்பம் அளித்தும் இதுகானும் எனக்கு நகராட்சியில் வழங்கப்படவில்லை. எனவே இந்த மனுவின் மீது பரிவுடன் நடவடிக்கை எடுத்து மேற்காண் சேமநலநிதி தொகை மற்றும் விடுப்பு ஊதியத் தொகைகளை வழங்குமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்." .

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோவில்பட்டி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடமிருந்து உரிய நாளுக்குள் அறிக்கைபெறாததால், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையர் ஆகியோரை 10.06.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இதனை தொடர்ந்து கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.0556/2026/சி1, நாள் 04.06.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றம் நடுவம், முறையீட்டு மனு எண்.34/ந/2026 நாள் 02.02.2026 ல் கண்ட மனுவில் திரு. இரா. செல்லப்பாண்டியன், ஓட்டுநர் (ஓய்வு) என்பவர் சேமநலநிதி தொகை மற்றும் ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பிற்கான விடுப்பு ஊதியம் வழங்க கோரியுள்ளார். மனுதாரர் இந்நகராட்சியில் பொறியாளர் பிரிவில் ஓட்டுநராக பணிபுரிந்து கடந்த 28.02.2025ல் வயது முதிர்வின் காரணமாக ஒய்வுபெற்றுள்ளார். அன்னாரின் ஒய்வூதியம் மற்றும் ஒய்வூதிய பலன்கள் வழங்கக்கேட்டு வரப்பெற்ற ஒய்வூதிய பிரேரணை இவ்வலுவலக 04.04.2025 தேதிய கடிதம் ந.க.எண்.5698/2024/சி1–ன்படி சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கோவில்பட்டி நகராட்சியில் தற்போது பணிபுரிந்து வரும் பணியாற்றி ஒய்வுபெற்ற பணியாளர்களுக்கும் / பணியிலிருந்து இறந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கும் கீழ்கண்ட விபரப்படி சேமநலநிதி தொகை வழங்கப்பட வேண்டிய நிலுவையாக உள்ளது.

<u>தற்போது பணி ஒய்வுபெற்றவர்கள் மற்றும் இறந்த பணியாளர்களின் சேமநலநிதி தொகை</u>

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | விண்ணப்பம் நாள் | வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. | 04.06.2026 அன்று வழங்கப்பட்ட தொகை (23%) |
|---|---|---|---|---|
| 1. | ச.மகாலட்சுமி,<br>மகப்பேறுஉதவியாளர் | 25.04.2022 | 5,00,000 | 1,15,000 |
| 2. | ரா. லலிதா,<br>மகப்பேறு உதவியாளர் | 15.09.2022 | 5,00,000 | 1,15,000 |
| 3. | ஆர்.சேகர்,<br>ஓட்டுநர் | 23.01.2023 | 5,00,000 | 1,15,000 |
| 4. | ஆவுடையம்மாள் / காளி<br>தூய்மைபணியாளர் பிரிவு–6 | 02.02.2023 | 1,00,000 | 23,000 |
| 5. | காளியம்மாள்/ சன்முகம்<br>தூய்மை பணியாளர் பிரிவு –1 | 21.03.2023 | 1,50,000 | 34,500 |
| 6. | முத்துமாரி/ கருப்பசாமி<br>தூய்மை பணியாளர் பிரிவு–1 | 27.03.2023 | 1,50,000 | 34,500 |
| 7. | ச.சுப்புலெட்சுமி,<br>உதவி திட்ட அமைப்பாளர் | 05.04.2023 | 5,00,000 | 1,15,000 |
| 8. | ந. சொர்ணராஜ்,<br>ஓட்டுநர் | 27.04.2023 | 5,00,000 | 1,15,000 |
| 9. | முருகன் / சின்னன்<br>தூய்மை பணியாளர் பிரிவு–1 | 17.08.2023 | 2,00,000 | 46,000 |
| 10. | பாண்டியம்மாள் / வேலுச்சாமி<br>தூய்மை பணியாளர் பிரிவு–3 | 29.02.2024 | 1,50,000 | 34,500 |
| 11. | சே. வேல்முருகன்,<br>ஓட்டுநர் | 16.02.2024 | 2,00,000 | 46,000 |
| 12. | குமராண்டி/ முனியாண்டி<br>தூய்மை பணியாளர் பிரிவு–3 | 29.02.2024 | 1,50,000 | 34,500 |
| 13. | முனியசாமி/ ராஜகோபால்<br>தூய்மை பணியாளர் பிரிவு–3 | 29.02.2024 | 1,50,000 | 34,500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | முருகன் / கிருஷ்ணன்<br>தூய்மை பணியாளர் | 06.09.2024 | 5,54,000 | 1,27,420 |
| 15. | சுந்தர்ராஜ் / பிச்சாண்டி<br>தூய்மை பணியாளர் | 09.09.2024 | 4,27,334 | 98,286 |
| 16 | மாரியம்மாள் / முத்தையா,<br>தூய்மை பணியாளர் | 05.11.2024 | 6,40,258 | 1,47,259 |
| 17. | அய்யனார்,<br>தூய்மை பணியாளர் | 05.11.2024 | 6,31,505 | 1,45,246 |
| 18. | பரமசிவன் / பெருமாள்,<br>தூய்மை பணியாளர் | 08.11.2024 | 6,99,600 | 1,60,908 |
| 19. | தமிழ்செல்வி<br>தூய்மை பணியாளர் | 06.03.2025 | 6,33,231 | 1,45,643 |
| 20. | பாண்டி/ மலையாண்டி<br>தூய்மைபணியாளர் | 18.03.2025 | 3,00,000 | 69,000 |
| 21. | இரா. செல்லப்பாண்டியன்,<br>ஓட்டுநர் | 04.04.2025 | 14,14,611 | 3,25,360 |
| 22. | நாகராஜ் / மாடசாமி<br>தூய்மை பணியாளர் | 23.04.2025 | 5,78,810 | 1,33,126 |
| 23. | அருள்ராஜ்<br>தூய்மை பணியாளர் | 08.08.2025 | 7,50,189 | 1,72,543 |
| 24. | பேச்சிமுத்து/செண்பகம்<br>தூய்மை பணியாளர் | 15.09.2025 | 6,98,270 | 1,60,602 |
| 25. | மாயசுந்தரி / முத்து வீரன்<br>தூய்மை பணியாளர் | 11.05.2026 | 5,60,920 | 1,29,011 |
| 26. | வெங்கடேசன்<br>துப்புரவு அலுவலர் | 11.05.2026 | 96,000 | 22,080 |
| 27. | மாரியப்பன் / சண்முகம்<br>தூய்மை பணியாளர் | 26.05.2026 | 4,00,322 | 92,074 |
| 28. | மதுரைவீரன்,<br>தூய்மை பணியாளர் | 26.05.2026 | 7,24,034 | 1,66,527 |
| | | | 1,28,59,084 | 29,57,585 |

மேலும், இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற/ இறந்த பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி ஈட்டிய விடுப்பு/ ஈட்டா விடுப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டி செலவுச் சீட்டு கணக்குப் பிரிவில் நிலுவையில் உள்ளது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | ஓய்வு பெற்ற நாள் | வழங்கப்பட வேண்டிய ஈட்டிய விடுப்பு ரூ. | வழங்கப்பட வேண்டிய ஈட்டா விடுப்பு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | சங்கரன்/ சின்னகுருவன்<br>தூய்மை பணியாளர் | 05.01.2024<br>இறப்பு | 3,99,040<br>(பகுதி) | 0 |
| 2. | மாரியம்மாள்/ மாடசாமி<br>தூய்மை பணியாளர் | 31.03.2024 | 2,49,400<br>(பகுதி) | 0 |
| 3. | மாடத்தி /மூக்கையா<br>தூய்மை பணியாளர் | 30.04.2024 | 2,87,323<br>(பகுதி) | 0 |
| 4. | மாரிச்சாமி / பெருமாள்<br>தூய்மை பணியாளர் | 12.04.2021<br>இறப்பு | 82,475<br>(பகுதி) | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | ராமசந்திரன்/அபிமன்னன் தூய்மை பணியாளர் | 31.05.2024 | 4,47,600 (பகுதி) | 0 |
| 6. | ராமசந்திரன்/ பெருமாள் தூய்மை பணியாளர் | 31.05.2024 | 4,47,600 (பகுதி) | 0 |
| 7. | மாரியப்பன் / காளியப்பன் தூய்மை பணியாளர் | 30.06.2024 | 4,86,400 | 0 |
| 8. | முருகன் / மாடன் தூய்மை பணியாளர் | 31.07.2024 | 4,78,800 | 0 |
| 9. | மாயசுந்தரி / முத்துவீரன் தூய்மை பணியாளர் | 31.07.2024 | 4,68,400 | 0 |
| 10. | காளியப்பன் / கருப்பையா தூய்மை பணியாளர் | 31.07.2024 | 4,82,400 | 0 |
| 11. | மாரியப்பன் / சண்முகம் தூய்மை பணியாளர் | 30.04.2024 | 3,61,232 | 0 |
| 12. | சண்முகத்தாய் / குருசாமி தூய்மை பணியாளர் | 31.08.2024 | 2,96,485 | 0 |
| 13. | மாரியம்மாள் / முத்தையா தூய்மை பணியாளர் | 31.10.2024 | 4,18,000 | 0 |
| 14. | பரமசிவம் / பெருமாள் தூய்மை பணியாளர் | 31.10.2024 | 4,68,400 | 0 |
| 15. | G. வெங்கடேசன் துப்புரவு அலுவலர் | 31.11.2024 | 10,90,480 | 0 |
| 16 | அய்யனார் / பரமசிவன் தூய்மை பணியாளர் | 29.08.2024 | 4,21,600 | 0 |
| 17. | தமிழ்செல்வி/ஜெயராஜ் தூய்மை பணியாளர் | 28.02.2025 | 44,400 | 1,66,650 |
| 18. | இரா. செல்லப்பாண்டியன், ஓட்டுநர் | 28.02.2025 | 7,86,928 | 2,95,098 |
| 19. | நாகராஜன் / மாடசாமி தூய்மை பணியாளர் | 31.03.2025 | 3,94,842 | 0 |
| 20. | கோமதி / பூவலிங்கம் தூய்மை பணியாளர் | 30.06.2025 | 3,86,480 | 1,44,930 |
| | | | 84,98,285 | 6,06,678 |

கோவில்பட்டி நகராட்சியின் நிதி ஆதாரத்தை முன்னிட்டு மேற்படி பணியாளர்களுக்கு விண்ணப்பித்த நாளின் முன்னுரிமை (Seniority) அடிப்படையில் சேமநலநிதி தொகை மற்றும் ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் தற்போது பணிபுரிந்து வரும், ஓய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்களின் சேமநலநிதித் தொகை வழங்கப்பட வேண்டிய பணியாளர்களின் பட்டியலில் திரு. இரா.செல்லப்பாண்டியன், ஓட்டுநர் (ஓய்வு) முன்னுரிமை வரிசையில் 21–வது பணியாளராக உள்ளார். மேற்கண்ட பணிபுரிந்து வரும், ஓய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்களில் சேமநல நிதி தொகை 28 பணியாளர்களுக்கும் தற்போது சேமநலநிதி இருப்புத் தொகை ரூ.30,63,927/–ல் ஒவ்வொரு பணியாளர்களுக்கும் 23% சதவீதத் தொகை ரூ.29,57,585/– மட்டும் 04.06.2026 அன்று

வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு பணியாளர்களுக்கு சேமநல நிதி தொகை வழங்கப்பட்டதில் திரு. செல்லப்பாண்டியன் ஒட்டுநருக்கு சேமநலநிதி நிலுவை தொகை ரூ.14,14,611/–ல் தற்போது ரூ.3,25,360/– மட்டும் 04.06.2026 அன்று வழங்கப்பட்டுள்ளது. திரு. செல்லப்பாண்டியன், ஒட்டுநர் என்பவருக்கு சேமநல நிதி வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ.10,89,251/– இந்நகராட்சியின் நிதிநிலைமை திருப்தியானவுடன் விரைவில் வழங்கப்படும்.

இந்நகராட்சியில் ஓய்வுபெற்ற மற்றும் இறந்த பணியாளர்களின் ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டிய பட்டியலில் திரு. இரா. செல்லப்பாண்டியன், ஒட்டுநர் (ஓய்வு) என்பவர் முன்னுரிமை வரிசையில் 18வது பணியாளராக உள்ளார். மேற்படி பட்டியலில் திரு. இரா. செல்லப்பாண்டியன், ஒட்டுநரையும் சேர்த்து 20 பணியாளர்களுக்கு ரூ.91,04,963/– வழங்கப்பட வேண்டிய நிலுவையாகும்.

திரு. இரா. செல்லப்பாண்டியன், ஒட்டுநருக்கு சேமநல நிதித் தொகை ரூ.10,89,251/– (முன்னுரிமை பட்டியல் வரிசை எண்.21ன் படி) மற்றும் ஈட்டிய விடுப்பு / ஈட்டா விடுப்பு தொகை ரூ.10,82,026/– (முன்னுரிமை பட்டியல் வரிசை எண்.18ன்படி) இந்நகராட்சியின் நிதி நிலைமை திருப்தியடைந்த உடன் விரைவில் வழங்கப்பட்டு விடும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''.

5. மனுதாரர் 10.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தமிழ்நாடு உள்ளாட்சி சிமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில்–

''14.09.1990 முதல் கோவில்பட்டி நகராட்சியில் ஓட்டுநராகப் பணிபுரிந்து 28.02.2025 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்ற எனக்கு சேமநலநிதி தொகை ரூ.14,14,611/– ஈட்டிய விடுப்பு தொகை மற்றும் ஈட்டா விடுப்பு தொகை ஆகியவை இன்று நாள் வரை கிடைக்கப்படவில்லை.

பலமுறை நேரிலும், தபாலிலும் கோவில்பட்டி நகராட்சி அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டும், எனக்கு நாளது தேதி வரை மேற்படி நிலுவை தொகைகள் கிடைக்கவில்லை. எனவே, எனக்கு உடனடியாக நியாயமாக சேரவேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் பெற்றுத்தருவதற்கு உரிய ஆணைகளை கோவில்பட்டி நகராட்சி ஆணையருக்கு வழங்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.0556/2026/சி1, நாள் 08.06.2026–ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு கோவில்பட்டி நகராட்சி அலுவலக வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர் (பொறுப்பு) திரு.சு.சண்முகவேல் என்பவரை ஆஜராக அனுமதி வழங்க கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, 10.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் கோவில்பட்டி நகராட்சி அலுவலக வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர் (பொறுப்பு) திரு.சு.சண்முகவேல் என்பவர் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில் –

''மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதித்தொகை ரூ.14,14,111/–ல் ரூ.3,25,360/– மட்டும் பில்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு, வரும் புதன்கிழமை (17.06.2026)ம் தேதிக்குள் மனுதாரருக்கு வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீதமுள்ள நிலுவைத் தொகைகள் ஈட்டிய விடுப்பு ரூ.7,86,928/– ஈட்டா விடுப்பு ரூ.2,95,098/– ஆக மொத்தம் ரூ.10,82,026/– மற்றும் நிலுவையிலுள்ள சேமநலநிதி தொகை ரூ.10,89,251/– ஆக மொத்தம் ரூ.21,71,277/–ஐ நான்கு மாதங்களுக்குள் மாதாமாதம் ஒரு

தொகையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி வருவாய் அலுவலர் மற்றும் மேலாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் கோவில்பட்டி நகராட்சியில் ஓட்டுநராகப் பணிபுரிந்து 28.02.2025 அன்று ஓய்வு பெற்றுள்ளார் என்பதும், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநல நிதித் தொகை ரூ.14,14,611/–, ஈட்டிய விடுப்புத் தொகை மற்றும் சொந்த அலுவல் நிமித்தமாக உள்ள ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு தொகை போன்றவை வழங்க வேண்டி கோவில்பட்டி நகராட்சி ஆணையர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு விண்ணப்பம் அளித்தும் மேற்படி தொகைகள் வழங்கப்படாமல் உள்ளது என்ற விவரம் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரரின் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்கள் வழங்கும் பொருட்டு ஓய்வூதிய பிரேரணை சென்னை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதும், ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுகள் என 28 நபர்களுக்கு சேமநலநிதி தொகை வழங்கப்பட வேண்டி உள்ளது என்பதும், இவ்வாறே ஈட்டிய விடுப்பு/ ஈட்டா விடுப்பு ஊதியம் 20 நபர்களுக்கு வழங்க வேண்டி உள்ளது என்பதும், நிதி ஆதாரம் பெற்றதும் மேற்படி நபர்களுக்கு விண்ணப்பித்த நாளை முன்னுரிமையாக (Seniority) கொண்டு நிலுவைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதும், மனுதாரர் வழங்கப்பட வேண்டிய சேமநலநிதி நிலுவை பட்டியலில் முன்னுரிமை வரிசையில் 21 ஆக உள்ளார் என்பதும், தற்போது இருப்பில் இருந்த ரூ.30,63,927/–ஐ 23% வீதம் ரூ. 29,57,585/– ஒவ்வொரு நபருக்கும் பிரித்தளிக்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதி நிலுவை தொகை ரூ. 14,14,611/–ல் ரூ.3,25,360/– வழங்கப்படவுள்ளது என்பதும், பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் வாரிசுகள் என 20 நபர்களுக்கு ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு தொகை ரூ.91,04,963/– வழங்க வேண்டி உள்ளது என்பதும், வழங்கப்பட வேண்டிய ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு தொகை பட்டியலில் முன்னுரிமை வரிசையில் மனுதாரர் 18வதாக உள்ளார் என்பதும், மனுதாரருக்கு சேமநலநிதி தொகை ரூ.10,89,251/–ம் ஈட்டிய விடுப்புத் தொகை ரூ.7,86,928/– மற்றும் ஈட்டா விடுப்புத் தொகை ரூ.2,95,098/– என ரூ.21,71,277/– வழங்கப்பட வேண்டியுள்ளது என்பதும், கோவில்பட்டி நகராட்சியின் நிதி நிலைமை திருப்தியடைந்ததும் விரைவில் மேற்படி தொகைகள் வழங்கப்பட்டு விடும் என்பதும் கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி வருவாய் அலுவலர் மற்றும் மேலாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில் ஓய்வு பெற்ற நகராட்சி பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய பலன்கள் 2022–லிருந்து நிலுவையாக இருந்து வருவது மிகுந்த வருத்தமளிக்கக்கூடியதாகும். ஓய்வு கால பணபயன்கள் ஓய்வு பெற்ற நகராட்சி பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குறித்த நேரத்தில் வழங்காதபட்சத்தில், அவர்கள் பெரும் பொருளாதார பாதிப்புக்குள்ளாவர்கள் என்பதை நகராட்சி ஆணையர்கள் கருத்திற் கொண்டு செயல்பட வேண்டும். அவ்வாறு குறித்த நேரத்தில் பணபலன்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளாததால், இத்தகைய பெருவாரியானத் தொகை வழங்கப்பட வேண்டிய நிலைக்கு நகராட்சி தள்ளப்பட்டுள்ளது என்பதை சுட்டிகாட்டுவதுடன், மேற்படி செயலை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், நகராட்சி நிர்வாக இயகுநரின் சுற்றறிக்கை ந.க.எண்.20496/2021/எம்3, நாள் 02.03.2022ல் பத்தி 18ல் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு தணிக்கை தடைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் ஏதேனும் நிலுவையில் இருந்தால் அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் முறையாக வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு, இனிவருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாதவாறு உரிய நடவடிக்கை மேற்கொண்டு, நகராட்சிக்கு வரவேண்டிய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில் சிறப்பு கவனம் செலுத்தி, ஓய்வு

பெற்ற நகராட்சி பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய பணபயன்கள் அரசு விதிமுறை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிவுரைகளை பின்பற்றி விரைந்து வாக்குமூலத்தில் தெரிவித்தபடி வழங்கிட கோவில்பட்டி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 08 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. செல்லப்பாண்டியன்,
   எண்.78, அண்ணா நகர்,
   சொக்கிகுளம், மதுரை வடக்கு
   மதுரை மாவட்டம் – 625 002.

2. நகராட்சி ஆணையர்,
   கோவில்பட்டி நகராட்சி,
   தூத்துக்குடி மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

10/7/26
செயலாளர்.

6/7.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032